**டிசம்பர் – 12**

# TNPSC துளிகள்

- உலக வர்த்தக அமைப்பின் பிரச்சினைத் தீர்வு அமைப்பின் மேல்முறையீட்டு குழுவில் உள்ள உறுப்பினர்களின் நியமனங்களை அமெரிக்கா முடக்கியுள்ளது.
    - எனவே, மேல்முறையீட்டுக் குழுவின் செயல்பாடுகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியில் அந்த அமைப்பின் உறுப்பினர்களால் ஒரு ஒருமித்த கருத்தை எட்ட முடியவில்லை.
- சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் நாட்டில் சிறந்த வாழ்வை மேம்படுத்துவதற்கும் "பசுமையான (சுற்றுச்சூழலுக்கு உகந்த) சிறந்த செயல்கள்" என்ற ஒரு முன்முயற்சியை மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சரான டாக்டர் ஹர்ஷ் வர்தன் தொடங்கினார்.
- ஏர் இந்தியா விமான நிறுவனத்திற்குச் சொந்தமான அலையன்ஸ் ஏர் என்ற துணை நிறுவனமானது, RCS-UDAN (பிராந்திய இணைப்புத் திட்டம் - உததேஷ் காஆம்நாக்ரிக் / Regional Connectivity Scheme – UdeDeshKaAamNagrik) என்ற திட்டத்தின் கீழ் குவஹாத்தி முதல் திமாபூர் வரை மற்றும் திமாபூர் முதல் இம்பால் வரையிலான தனது முதலாவது விமானப் பயணங்களைத் தொடங்கியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் அறிக்கை – HDIல் இந்தியா 129வது இடம்

- 2019 ஆம் ஆண்டின் மனித வளர்ச்சிக் குறியீட்டில் (Human Development Index - HDI) மொத்தமுள்ள 189 நாடுகளில் இந்தியா ஒரு இடம் முன்னேறி 129வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தக் குறியீட்டில் 2018 ஆம் ஆண்டில் இந்தியா 130வது இடத்தில் இருந்தது.
- இந்தக் குறியீடானது ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தினால் (United Nations Development Programme - UNDP) வெளியிடப் பட்டுள்ளது.
- இந்தத் தரவரிசையானது வறுமை, கல்வி, வாழ்நாள் கால அளவு மற்றும் சுகாதார நல வசதிகளை அணுகல் ஆகியவற்றின் அடிப்படையில் பட்டியலிடப் பட்டுள்ளது.
- இந்தத் தரவரிசையானது "வருமானத்திற்கு மேலே, சராசரிகளுக்கு மேலே, இன்றையத் தினத்திற்கு அப்பால்: 21 ஆம் நூற்றாண்டில் மனித வளர்ச்சியில் ஏற்றத் தாழ்வுகள்" என்ற தலைப்பில் பட்டியலிடப் பட்டுள்ளது.
- இந்தத் தரவரிசையில் நார்வே, சுவிட்சர்லாந்து, அயர்லாந்து ஆகிய நாடுகள் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன.

### *முக்கியமான அம்சங்கள்*

- 1990 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை குழந்தை பிறப்பின் போது ஆயுட்கால எதிர்பார்ப்பானது 11.6 ஆண்டுகள் அதிகரித்துள்ளது என்பதையும் தனிநபர் வருமானம் 250 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளது என்பதையும் இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.
- சமூக உள்ளடக்கல் மற்றும் பாலினச் சார்பு ஆகிய பிரச்சினைகள் பற்றியும் இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.
- இந்தியாவில், 2005-06 முதல் 2015-16 வரை 27.1 கோடி மக்கள் வறுமையிலிருந்து விடுவிக்கப் பட்டுள்ளனர்.

- பாலின வளர்ச்சிக் குறியீட்டில் இந்தியா 122வது இடத்தில் உள்ளது.
- இருப்பினும், இந்த அறிக்கையின் படி, உலகில் ஏழைகளை அதிகம் கொண்ட நாடு இந்தியா ஆகும். உலகில் உள்ள மொத்த ஏழைகளில் 41% ஏழைகளை இந்தியா கொண்டுள்ளது.
- சமத்துவமின்மையைக் கணக்கில் கொண்டு எடுக்கப்பட்ட HDIல் (IHDI - Inequality-Adjusted HDI), இந்தியாவின் நிலையானது ஒரு நிலை பின்தங்கி 130வது இடத்தில் உள்ளது.
- ஏற்றத் தாழ்வுகள் காரணமாக HDIயில் ஏற்படும் சதவீத இழப்பை IHDI குறிக்கின்றது.
- பாலினச் சமத்துவமின்மைக் குறியீட்டில் (Gender Inequality Index - GII) இந்தியாவின் மதிப்பு 0.501 ஆகும். 2018 ஆம் ஆண்டின் GII குறியீட்டில் மொத்தமுள்ள 162 நாடுகளில் இந்தியா 122 இடத்தைப் பிடித்துள்ளது.

**Ups and downs**

Among India's neighbours Sri Lanka moved up five rungs on the HDI ladder while Madives fell three ranks. While Pakistan slipped two spots, Bangladesh moved up one

| Country | 2017 Rank | 2018 Rank |
|---|---|---|
| India | 130 | 129 |
| Brazil | 79 | 79 |
| China | 86 | 85 |
| Russia | 49 | 49 |
| South Africa | 113 | 113 |
| Pakistan | 150 | 152 |
| Afghanistan | 168 | 170 |
| Sri Lanka | 76 | 71 |
| Bhutan | 134 | 134 |
| Nepal | 149 | 147 |
| Bangladesh | 136 | 135 |
| Maldives | 101 | 104 |

Source: Human Development Report, UN

**The top five**

| |
|---|
| Norway |
| Switzerland |
| Ireland |
| Germany |
| Hong Kong |

**India & the neighbourhood**

| | Ranking |
|---|---|
| Sri Lanka | 71 |
| India | 129 |
| Bhutan | 134 |
| Bangladesh | 135 |
| Pakistan | 152 |
| Afghanistan | 170 |

## கப்பல்கள் உடைப்பு மீதான மசோதா - 2019

- இந்தியாவில் பாதுகாப்பான முறையில் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் கப்பல்களை உடைப்பதற்கான 'கப்பல்கள் உடைப்பு மீதான மசோதா - 2019' என்பதனை நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- இது தற்போதுள்ள கப்பல் உடைப்பு நெறிமுறை (திருத்தப்பட்டது), 2013 மற்றும் 2009 ஆம் ஆண்டின் ஹாங்காங் ஒப்பந்தத்தின் விதிகள் ஆகியவற்றை இணைக்கின்றது.
- இந்தியாவில் உடைக்கப்பட வேண்டிய கப்பல்கள் ஹாங்காங் ஒப்பந்தத்தின் படி, 'உடைப்பதற்கான தயார்நிலைச் சான்றிதழைப்' பெற வேண்டும்.

*முக்கிய அம்சங்கள்*

- இது ஆலங் (குஜராத்), மும்பைத் துறைமுகம், கொல்கத்தா துறைமுகம் மற்றும் அழிக்கல் (கேரளா) ஆகிய இடங்களில் அமைந்துள்ள இந்தியாவின் கப்பல்கள் உடைப்பு ஆலைகளின் நிறுவன மதிப்பை உயர்த்தும்.
- நாட்டின் இரண்டாம் நிலை எஃகுத் தேவைகளில் 10% எஃகுத் தேவை சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் இதன் மூலம் பூர்த்தி செய்யப்படும்.
- இரண்டாம் நிலை எஃகு என்பது கப்பல்களை உடைப்பதன் மூலம் கிடைப்பதாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா & ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் மூன்றாவது 2 + 2 உரையாடல்

- இந்தியா & ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் செயலாளர் நிலையிலான மூன்றாவது 2 + 2 சந்திப்பானது புது தில்லியில் நடத்தப்பட்டது.
- 2 + 2 என்பது ஒரு வகையான உரையாடலாகும். இந்த உரையாடலின் போது இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் அல்லது செயலாளர்கள் மற்றொரு நாட்டைச் சேர்ந்த பாதுகாப்பு மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மற்றும் செயலாளர்களைச் சந்திக்கின்றார்கள்.
- இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையிலான செயலாளர் மட்டத்திலான 2 + 2 சந்திப்பானது 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- தற்போது, ஆஸ்திரேலியாவைத் தவிர, இந்தியாவானது அமெரிக்கா மற்றும் ஜப்பானுடன் 2 + 2 அமைச்சரவைச் சந்திப்பு நெறிமுறையைக் கொண்டுள்ளது.



# பொருளாதாரச் செய்திகள்

## தேசிய முதலீட்டு மற்றும் உள்கட்டமைப்பு நிதி மற்றும் கனடா ஓய்வூதிய நிதி

- கனடாவின் மிகப்பெரிய ஓய்வூதிய நிதியான கனடா ஓய்வூதியத் திட்ட முதலீட்டு வாரியமானது (Canada Pension Plan Investment Board - CPPIB) தேசிய முதலீட்டு மற்றும் உள்கட்டமைப்பு நிதியில் (National Investment and Infrastructure Fund - NIIF) சுமார் 600 மில்லியன் டாலர்களை NIIF மாஸ்டர் நிதி மூலம் முதலீடு செய்ய ஒப்புக் கொண்டுள்ளது.
- புதிதாகத் தொடங்கப்படும் திட்டங்கள் மற்றும் ஏற்கெனவே உள்ள திட்டங்களைப் புதுப்பித்தல் ஆகிய இரண்டிற்கும் வணிக ரீதியாக சாத்தியமான நிதியுதவிக்கான முதலீட்டு வழியாக ரூ 40000 கோடி நிதியுடன் 2015 ஆம் ஆண்டில் இந்திய அரசானது NIIFஐ அமைத்துள்ளது.
- இது இந்தியாவின் முதலாவது இறையாண்மை செல்வ நிதியாகும்.
- NIIF ஆனது இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தில் (Securities and Exchange Board of India - SEBI) மாற்று முதலீட்டு நிதியாக (Alternative Investment Fund - AIF) பதிவு செய்யப் பட்டுள்ளது.

## சிறு நிதியியல் வங்கிகளின் உரிமத்திற்கான வழிகாட்டுதல்கள்

- சிறு நிதியியல் வங்கிகளின் (Small Finance Banks - SFBs) “ஆன் டேப்” உரிமத்திற்கான இறுதி வழிகாட்டுதல்களை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.
- 2015 ஆம் ஆண்டில் SFBsக்காக பத்து விண்ணப்பதாரர்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கி தனது கொள்கை ரீதியான ஒப்புதலை அளித்துள்ளது.
- "ஆன் - டேப்" வசதி என்பது இந்திய ரிசர்வ் வங்கியானது வங்கிகளுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொண்டு ஆண்டு முழுவதும் அந்த வங்கிகளுக்கான உரிமங்களை வழங்குதலாகும்.

***வழிகாட்டுதல்கள்***

- மூலதனத் தேவை: குறைந்த பட்ச ஊதியம் பெறும் வாக்களிப்புப் பங்கு மூலதனம்/ நிகர மதிப்புத் தேவை ₹ 200 கோடி ஆகும்.
- SFBகளுக்கு திட்டமிடப்பட்ட வங்கிகளின் அங்கீகாரம்: SFBகளின் செயல்பாடுகள் தொடங்கிய உடனேயே அவற்றிற்குத் திட்டமிடப்பட்ட வங்கிகளுக்கான அங்கீகாரம் வழங்கப் படும்.
- பணவழங்கீட்டு வங்கிகள் SFBகளுக்கு மாற்றுதல்: பணவழங்கீட்டு வங்கிகள் 5 ஆண்டுச் செயல்பாடுகளுக்குப் பிறகு SFB ஆக மாறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

| | PAYMENTS BANKS | SMALL BANKS |
|---|---|---|
| WHO CAN PROMOTE | › Prepaid card issuers, telecom companies, NBFCs, business correspondents, supermarket chains, corporates, realty sector co-ops & PSUs | › Individuals/professionals with 10 years experience in finance, NBFCs, microfinance cos, local area banks |
| WHAT THEY MUST DO | › Have a minimum capital of Rs 100cr<br>› Maintain 75% of deposits in govt bonds<br>› Maintain 25% of deposits in other banks<br>› Have at least 26% investment by Indians<br>› Get listed if net worth crosses Rs 500cr<br>› Have 25% of branches in unbanked areas<br>› Be fully networked and technology driven<br>› Have Rs 1 lakh cap for deposits in one a/c | › Have a minimum capital of Rs 200cr<br>› Extend 75% of loans to priority sector<br>› Have 25% of branches in unbanked areas<br>› Maintain reserve requirements<br>› Cap loans to individuals and groups at 10% and 15% of net worth<br>› Have a business correspondent network |
| WHAT THEY CAN DO | › Offer internet banking<br>› Sell mutual funds, insurance, pensions<br>› Offer bill payment service for customers<br>› Have ATMs and business correspondents (BC)<br>› Can function as BC of another bank | › Sell forex to customers<br>› Sell mutual funds, insurance, pensions<br>› Can convert into a full-fledged bank<br>› Expand across the country |
| WHAT THEY CAN'T DO | › Offer credit cards<br>› Extend loans<br>› Handle cross-border remittances<br>› Accept NRI Deposits | › Extend large loans<br>› Float subsidiaries<br>› Cannot deal in sophisticated financial products |

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்திய ரயில்வேயின் புதிய ஹெட் ஆன் ஜெனரேஷன் தொழில்நுட்பம்

- இந்திய ரயில்வேயானது புதிய ஹெட் ஆன் ஜெனரேஷன் என்ற தொழில்நுட்பத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது இரைச்சல் மற்றும் காற்று மாசுபாட்டை நிவர்த்தி செய்வதற்கு வேண்டி பயணிகள் ரயில்களில் செயல்படுத்தப் படும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் ஆற்றல் திறனுள்ள ஒரு தீர்வாகும்.
- இந்திய ரயில்வேயானது மின்சார என்ஜின்களில் பொருத்தப்பட வேண்டிய மாற்றிகளை உருவாக்கி, அதனை மேம்படுத்தியுள்ளது.

- இந்த மாற்றிகள் டீசல் மின்னாக்கிகளையும் மாற்றும் திறன் கொண்டது.
- இந்த மாற்றிகள் என்ஜின்களை ஹெட் - ஆன் ஜெனரேஷன் தொழில்நுட்பத்திற்கு ஏற்றதாக ஆக்குகின்றன.
- அதிக சத்தம் (இரைச்சல்) ஏற்படுத்தும் புகை உமிழும் ஆற்றல் மின்னாக்கிகள் சத்தமற்ற மின்னாக்கிகளால் மாற்றப்பட இருக்கின்றன.
- இந்தத் தொழில்நுட்பத்தை ஜெர்மனியானது இந்திய ரயில்பெட்டித் தொழிற் சாலைகளுக்கு வழங்கியுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## COP25 காலநிலை உச்சி மாநாடு

- காலநிலை மாற்றம் மீதான ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு ஒப்பந்தம் (United Nations Framework Convention on Climate Change - UNFCCC) அல்லது COP25க்கான பங்காளர் மாநாட்டின் 25வது பதிப்பானது ஸ்பெயினின் மாட்ரிட்டில் நடத்தப்பட்டது.
- 2015 பாரிஸ் ஒப்பந்தத்தின் விதிமுறைகளை இறுதி செய்வதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.
- இறுதியாக, 75 நாடுகள் 2020 ஆம் ஆண்டிற்குள் 2050 ஆம் ஆண்டின் நிகர சுழிய கார்பன் உமிழ்வு உத்திகளை வழங்க உறுதி பூண்டுள்ளன.
- இது பின்வரும் அறிக்கைகளை பரிசீலிக்க இருகின்றது. அவையாவன
    - ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தினால் (UN Environment Programme - UNEP) தயாரிக்கப்பட்ட வருடாந்திர உமிழ்வு இடைவெளி அறிக்கை.
    - காலநிலை மாற்றம் தொடர்பான அரசுகளுக்கிடையேயான குழுவின் (Intergovernmental Panel on Climate Change - IPCC) தொடர் அறிக்கைகள்.

### *காலநிலை மாற்ற செயல்பாட்டுக் குறியீடு*

- இது ஜெர்மனியில் உள்ள சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டு அமைப்பான ஜெர்மன்வாட்ச் என்ற அமைப்பினால் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இந்தக் குறியீடானது 57 நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கு, உமிழ்வு மற்றும் காலநிலை கொள்கைகள் ஆகியவற்றை மதிப்பிடுகின்றது.
- வழங்கப்பட்டுள்ள இந்தத் தரவரிசையில் முதல்முறையாக இந்தியா 9வது இடத்தில் உள்ளது.
- மிக மோசமாக செயல்படும் நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதன்முறையாகச் சேர்க்கப் பட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் ஸ்வீடன் முதலிடத்தையும் சீனா 30வது இடத்தையும் பிடித்துள்ளன.
- இருப்பினும், எந்தவொரு நாட்டாலும் சுற்றுச்சூழல் சார்ந்த அனைத்து தரங்களையும் 100% பூர்த்தி செய்ய முடியாததால், இந்தப் பட்டியலில் முதல் மூன்று இடங்கள் காலியாக உள்ளன.
- இந்தப் பட்டியலின் தரவரிசையானது நான்காவது இடத்திலிருந்து தொடங்கப் பட்டு இருக்கின்றது. அவ்வாறு தொடங்கப்பட்டதில் ஸ்வீடன் முதலிடத்தில் உள்ளது.

### *பின்னணி*

- 1997 ஆம் ஆண்டின் கியோட்டோ நெறிமுறையை (2020 இல் முடிவுக்கு வருகின்றது) மாற்றுவதற்காக 2020 ஆம் ஆண்டில் பாரிஸ் ஒப்பந்தம் நடைமுறைக்கு வர

இருக்கின்றது.

- கியோட்டோ நெறிமுறையானது 1997 ஆம் ஆண்டில் ஜப்பானின் கியோட்டோவில் ஏற்றுக் கொள்ளப் பட்டு, 2005 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- கியோட்டோ நெறிமுறையானது தொழில்துறை மயமாக்கப்பட்ட நாடுகளால் கார்பன் உமிழ்வைக் குறைந்தது 18% அளவிற்கு குறைப்பதற்கான இலக்கைக் கொண்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## டிராஜ் பாலம் – ராஜோரி, ஜம்மு காஷ்மீர்

- ஜம்மு காஷ்மீர் ஒன்றியத்தின் துணைநிலை ஆளுநரான கிரிஷ் சந்திர முர்மு, ஜம்மு காஷ்மீரின் ராஜோரி நகரில் உள்ள டிராஜ் பாலத்தைத் திறந்து வைத்தார்.
- இது இராணுவத்திற்கும் ஜம்மு காஷ்மீரின் ராஜோரி மாவட்டத்தின் ஒட்டுமொத்த சமூக - பொருளாதார வளர்ச்சிக்கும் ஒரு முக்கியமான பாலமாக விளங்குகின்றது.
- இந்த முக்கியமான பாலமானது எல்லைச் சாலைகள் அமைப்பின் (Border Roads Organisation - BRO) சம்பார்க் திட்டத்தின் கீழ் 31 என்ற பணிக் குழுவால் கட்டப்பட்டுள்ளது.




## ஜார்க்கண்டின் மஹுவாமிலன் நிலையம்

- ஜார்க்கண்டில் உள்ள கிழக்கு மத்திய ரயில்வே (East Central Railway - ECZ) மண்டலத்தைச் சேர்ந்த மஹுவாமிலன் ரயில் நிலையமானது இலவச அருகலை அல்லது வைஃபை வசதியைப் பெறும் 5500வது ரயில் நிலையமாக உருவெடுத்துள்ளது.
- இந்திய ரெயில்டெல் கழகமானது (RailTel Corporation of India Ltd - RCIL) நாடு முழுவதும் 5,500 நிலையங்களில் இலவச வைஃபை வசதியை வழங்கி வருகின்றது.

### *ரெயில்டெல் பற்றி*

- ரெயில்டெல் என்பது இந்திய ரயில்வேயின் ஒரு டிஜிட்டல் கூறாகும்.
- ரெயில்டெல் என்பது ஒரு 'மினிரத்னா' வகை நிறுவனமாகும்.

# இதரச் செய்திகள்

## சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் ரஷ்யா பங்கேற்க WADA தடை விதித்துள்ளது

- உலக ஊக்க மருந்து எதிர்ப்பு நிறுவனத்தின் (World Anti-Doping Agency - WADA) செயற்குழுவானது ரஷ்யாவை அடுத்த 4 ஆண்டுகளுக்கு ஒலிம்பிக் போட்டி (2020 - டோக்கியோ & 2022 - பெய்ஜிங்) மற்றும் உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் விளையாடத் தடை விதித்துள்ளது.
- WADA அமைப்பானது 2015 ஆம் ஆண்டு ரஷ்யத் தடகளப் போட்டியில் அதிக அளவிலான ஊக்க மருந்து உட்கொண்டதற்கான ஆதாரங்களை முதன்முதலில் கண்டறிந்தது.
- ஆனாலும் ரஷ்ய விளையாட்டு வீரர்கள் தங்கள் நாட்டின் கொடி அல்லது கீதம் இல்லாமல் முக்கியமான சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் போட்டியிடலாம்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★